## மார்ச் - 03 - சனி

### தூய குணகுந்தா

### "முதல் தரமான ஆடையைக் கொண்டுவந்து இவனுக்கு உடுத்துங்கள்". லூாக்.15:22

### முதல் வாசகம் : மீக்கா 7 : 14 – 15, 18 – 20

ஆண்டவரே, உமது உரிமைச் சொத்தாய் இருக்கும் மந்தையாகிய உம்முடைய மக்களை உமது கோலினால் மேய்த்தருளும்! அவர்கள் கர்மேலின் நடுவே காட்டில் தனித்து வாழ்கின்றார்களே! முற்காலத்தில் நடந்ததுபோல அவர்கள் பாசானிலும் கிலயாதிலும் மேயட்டும்! எகிப்து நாட்டிலிருந்து நீங்கள் புறப்பட்டுவந்து நாளில் நடந்ததுபோல நான் அவர்களுக்கு வியத்தகு செயல்களைக் காண்பிப்பேன். உமக்கு நிகரான இறைவன் யார்? எஞ்சியிருப் ்போரின் குற்றத்தைப் பொறுத்து நீர் உமது உரிமைச் சொத்தில் எஞ்சியிருப்போரின் தீச்செயலை மன்னிக்கின்றீர் உமக்கு நிகரானவர் யார்? அவர் தம் சினத்தில் என்றென்றும் நிலைத்திரார் ஏனெனில், அவர் பேரன்புகூர்வதில் விருப்பமுடையவர் அவர் நம்மீது இரக்கம் காட்டுவார் நம் தீச்செயல்களை மிதித்துப்போடுவார் நம் பாவங்கள் அனைத்தையும் ஆழ்கடலில் எறிந்து விடுவார். பண்டைய நாளில் எங்கள் மூதாதையருக்கு நீர் ஆணையிட்டுக் கூறியதுபோல யாக்கோபுக்கு வாக்குப் பிறழாமையையும் ஆபிரகாமுக்குப் பேரன்மையும் காட்டியருள்வீர்

**பதில்பாடல் :** ஆண்டவர் இரக்கமும் அருளும் கொண்டவர்

### நற்செய்தி : லூாக்கா 15 : 1 – 3, 11 – 32

அக்காலத்தில் வரிதண்டுவோர், பாவிகள் யாவரும் இயேசு சொல்வதைக் கேட்க அவரிடம் நெருங்கிவந்தனர். பரிசேயரும், மறைநூல் அறிஞரும், "இவர் பாவிகளை வரவேற்று அவர்களோடு உணவருந்துகிறாரே" என்று முணுமுணுத்தனர். அப்போது அவர் அவர்களுக்கு இந்த உவமையைச் சொன்னார் "ஒருவருக்கு இரண்டு புதல்வர்கள் இருந்தார்கள். அவர்களுள் இளையவர் தந்தையை நோக்கி, "அப்பா, சொத்தில் எனக்கு உரிய பங்கைத் தாரும்" என்றார். அவர் சொத்தை அவர்களுக்குப் பகிர்ந்து அளித்தார். சில நாள்களுக்குள் இளைய மகன் எல்லாவற்றையும் திரட்டிக்கொண்டு, தொலை நாட்டிற்கு நெடும் பயணம் மேற்கொண்டார் அங்குத் தாறுமாறாக வாழ்ந்து தம் சொத்தையும் பாழாக்கினார். அனைத்தையும் அவர் செலவழித்தார். பின்பு அந்த நாடு முழுவதும் கொடிய பஞ்சம் ஏற்பட்டது. அப்பொழுது அவர் வறுமையில் வாடினார் எனவே அந்நாட்டுக் குடிமக்களுள் ஒருவரிடம் அண்டிப் பிழைக்கச் சென்றார். அவர் அவரைப் பன்றி மேய்க்கத் தம் வயல்களுக்கு அனுப்பினார். அவர் பன்றிகள் தின்னும் நெற்றுகளால் தம் வயிற்றை நிரப்ப விரும்பினார். ஆனால் அதைக்கூட அவருக்குக் கொடுப்பார் இல்லை. அவர் அறிவு தெளிந்தவராய், "என் தந்தையின் கூலியாள்களுக்குத் தேவைக்கு மிகுதியான உணவு இருக்க, நான் இங்குப் பசியால் சாகிறேனே! நான் புறப்பட்டு என் தந்தையிடம் போய், "அப்பா, கடவுளுக்கும் உமக்கும் எதிராக நான் பாவம் செய்தேன். இனிமேல் நான் உம்முடைய மகன் எனப்படத் தகுதியற்றவன் உம்முடைய கூலியாள்களுள் ஒருவனாக என்னை வைத்துக் கொள்ளும் என்பேன்" என்று சொல்லிக்கொண்டார். "உடனே அவர் புறப்பட்டுத் தம் தந்தையிடம் வந்தார். தொலையில் வந்து கொண்டிருந்தபோதே அவர் தந்தை அவரைக் கண்டு, பரிவு கொண்டு, ஓடிப்போய் அவரைக் கட்டித் தழுவி முத்தமிட்டார். மகனோ அவரிடம், "அப்பா, கடவுளுக்கும் உமக்கும் எதிராக நான் பாவம் செய்தேன் இனிமேல் நான் உம்முடைய மகன் எனப்படத் தகுதியற்றவன்" என்றார். தந்தை தம் பணியாளரை நோக்கி, "முதல்தரமான ஆடையைக் கொண்டுவந்து இவனுக்கு உடுத்துங்கள் இவனுடைய கைக்கு மோதிரமும், காலுக்கு மிதியடியும் அணிவியுங்கள். கொழுத்த கன்றைக் கொண்டு வந்து அடியுங்கள் நாம் மகிழ்ந்து விருந்து கொண்டாடுவோம். ஏனெனில் என் மகன் இவன் இறந்துபோயிருந்தான் மீண்டும் உயிர் பெற்று வந்துள்ளான். காணாமற்போயிருந்தான் மீண்டும் கிடைத்துள்ளான்" என்றார். அவர்கள் மகிழ்ந்து விருந்து கொண்டாடத் தொடங்கினார்கள். "அப்போது மூத்த மகன் வயலில் இருந்தார். அவர் திரும்பி வீட்டை நெருங்கி வந்துகொண்டிருந்தபோது, ஆடல் பாடல்களைக் கேட்டு, ஊழியர்களுள் ஒருவரை வரவழைத்து, "இதெல்லாம் என்ன?" என்று வினவினார். அதற்கு ஊழியர் அவரிடம், "உம் தம்பி வந்திருக்கிறார். அவர் தம்மிடம் நலமாகத் திரும்பி வந்திருப்பதால் உம் தந்தை கொழுத்த கன்றை அடித்திருக்கிறார்" என்றார். அவர் சினமுற்று உள்ளே போக விருப்பம் இல்லாதிருந்தார். உடனே அவருடைய தந்தை வெளியே வந்து, அவரை உள்ளே வருமாறு கெஞ்சிக் கேட்டார். அதற்கு அவர் தந்தையிடம், "பாரும், இத்தனை ஆண்டுகளாக நான் அடிமைபோன்று உமக்கு வேலை செய்துவருகிறேன். உம் கட்டளைகளை ஒருபோதும் மீறியதில்லை. ஆயினும், என் நண்பரோடு நான் மகிழ்ந்துகொண்டாட ஓர் ஆட்டுக்குட்டியைக்கூட என்றுமே நீர் தந்ததில்லை. ஆனால் விலைமகளிரோடு சேர்ந்து உம் சொத்துகளையெல்லாம் அழித்துவிட்ட இந்த உம் மகன் திரும்பி வந்தவுடனே, இவனுக்காகக் கொழுத்த கன்றை அடித்திருக்கிறீரே!" என்றார். அதற்குத் தந்தை, "மகனே, நீ எப்போதும் என்னுடன் இருக்கிறாய் என்னுடையதெல்லாம் உன்னுடையதே. இப்போது நாம் மகிழ்ந்துகொண்டாடி இன்புற வேண்டும். ஏனெனில் உன் தம்பி இவன் இறந்து போயிருந்தான் மீண்டும் உயிர்பெற்றுள்ளான். காணாமற்போயிருந்தான் மீண்டும் கிடைத்துள்ளான்" என்றார்"

**தியானம்:** உங்கள் தீச்செயல்களே உங்களுக்கும் உங்கள் கடவுளுக்கும் இடையே பிளவை உண்டாக்கியுள்ளன, உங்கள் பாவங்களே அவர் செவிசாய்க்காதவாறு அவரது முகத்தை உங்களுக்கு மறைத்துவிட்டன. (எசா.59:1-2) பாவங்கள்தான் மனிதர்களைக் கடவுளிடமிருந்து பிரிக்கின்றன. தீச் செயல்கள் செய்து தங்களைக் கடவுளிடமிருந்து பிரித்துக் கொள்பவர்கள் கடவுள் எங்களுக்குச் செவிசாய்க்கவில்லை, கடவுள் எங்களை கைவிட்டுவிட்டார் என்று கதறித் தங்களின் தண்டனைகளுக்குக் கடவுள்மீது பழியைப்போட்டு பேசுவது அன்றும் இன்றும் நடக்கின்ற ஒன்று. நீதியின்றி நேர்மையின்றி, பொய்யிலும் வஞ்சனையிலும் தீச்செயல்களிலும் காலத்தைக் கழிப்பவர்கள் கட்டாயம் தண்டிக்கப்படுவார்கள். "நான் என்ன செய்துவிட்டேன் என்று கூறுகிறார்களேயன்றி எவருமே தம் தீச்செயலுக்காக வருந்தவில்லை. போர்க்களத்தில் பாய்ந்தோடும் குதிரைபோல தம் வழியில் விரைகின்றார்கள்." (எரே.8:6) எனவே ஒரு மனிதன் தான் செய்வது தவறு என்று உணரும்வரை கடவுளால்கூட அந்த மனிதனைக் காப்பாற்ற முடியாது. அதே வேளையில் அறிவுதெளிந்த ஊதாரி மைந்தனைப்போல் நாமும் சுயதெளிவு பெற்று, நான் யாருக்குச் சொந்தம், எங்கு இருக்க வேண்டிய நான் இப்படி பன்றிகள் நடுவே, பாவத்தின் நடுவே கேட்பாரற்றுக் கிடக்கின்றேனே என்று உணர்வது முதல் நிலை. எனக்கு ஒரு தந்தை உண்டு அவர் என்னை எந்தவித நிபந்தனையும் இன்றி என் பாவங்களை மன்னித்து ஏற்றுக்கொள்வார் என்று விசுவசித்து கடவுளை நோக்கிச் செல்ல முயற்சி எடுப்பது இரண்டாம் நிலை. கடவுளின் கிருபைக்காக காத்திருப்பது மூன்றாம் நிலை. நாம் பாவத்தில் வீழ்ந்துவிட்டோம் என்பதில் அல்ல மாறாக நம்முடைய அறிவு தெளிவு பெற்று திருந்தி கடவுளிடம் திரும்பி வருவதில்தான் நம்முடைய கிருபையின் நாட்கள் தொடங்குகின்றன. ஆண்டவர் நம்மைக் குறித்து வேதனைப்படுவதும், கொண்டாடி மகிழ்வதும் நமது கரங்களில்தான் உள்ளது. நம்முடைய பாவங்கள், பலவீனங்கள், கெட்ட பழக்க வழக்கங்கள், கூடாநட்பு இவற்றில் நமது வாழ்நாள்களை வீணடிக்காமல், கடவுளின் வாக்குத்தத்தங்கள் (இறைவார்த்தை) மற்றும் வழிமுறைகளுக்கு நம்முடைய செவிகளையும், கண்களையும், எண்ணங்களையும் ஒப்புக்கொடுத்து இறைவனுடைய இரக்கத்தையும் மன்னிப்பையும் பெறுவோம்.